அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 234/2012

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.1 | 08.04.2026 |
| பெயர் ஜுடோரமேஷ் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு 24.10.2011 தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் ஆவடி அருகில் அன்னனூரில் உள்ள ஜோதிநகரில் உள்ளது. தாவா சொத்தில் யார் வசித்துவருகிறார்கள் என்றால் 1ம் பிரதிவாதி இருக்கிறார். எங்களிடம் கிரைய பணம் வாங்கிவிட்டு தாவா சொத்தை காலிசெய்யாமல் உள்ளார். 1ம் பிரதிவாதியை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 2011 ல் 10வது மாதம் கிரையஒப்பந்தம் ஏற்படுத்தியது சம்மந்தமாக பார்த்தேன்.

2. 1ம் வாதி சதீஷ் எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் பார்த்தது

இல்லை. வாதிகளுக்கும் எனக்கும் இடையே கொடுக்கல் வாங்கள் இருந்ததா என்றால் இல்லை. அவர்களுக்கும் கிரையத்திற்கும் சம்மந்தம் இல்லை. அவர்களின் தந்தை 1ம் பிரதிவாதி தான் ஏமாற்றிவிட்டார். வாதிதரப்பு எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 4 அல்லது 5 ஆவணங்கள் பற்றி தெரியும். 19.10.2011 அன்று 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு செட்டில்மென்ட் செய்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது பிரமாணவாக்குமூலத்தை படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் கையொப்பம் செய்தேன் முழுவிவரங்கள் தெரியாது. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் எந்த வருடத்தில் பவர் பத்திரம் ஏற்படுத்தினேன் என்றால் 31.03.2011. எனக்கு கிரையம் செய்வதற்கு 1ம் பிரதிவாதி பவர் கொடுத்தார். மேற்கூறிய பவர் பத்திரத்தை ரத்து செய்வதற்கு வழக்கு போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் பிரமாணவாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகள் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:—

1. 1ம் பிரதிவாதி உடன் கொடுக்கல் வாங்கலுக்கு உதவியது 1ம் பிரதிவாதியின் நண்பர் ரமேஷ் மற்றும் என் நண்பர் ராமு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பவர் பத்திரம் 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிகொடுத்து என்றால் சரிதான். ( **31.03.2011 தேதியிட்ட ஆவண எண் 840/2011 பொதுஅதிகாரபத்திரம் பி.சா.ஆ 5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பி.சா.ஆ.1 ஆவணம் என் மனைவிக்கு நான் எழுதிகொடுத்த கிரையஒப்பந்தம் என்றால் சரிதான். மேற்படி கிரையஒப்பந்தத்தை 1ம் பிரதிவாதியிடம் தெரிவித்தபிறகு தான் பதிவு

செய்தோம். பி.சா.ஆ1 03.08.2011 ஆவணத்தில் கிரைய மொத்ததொகை ரூ24 லட்சம் என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான். கிரைய முன்தொகை ரூ21 லட்சம் என் மனைவியிடம் நான் 03.08.2011 அன்று பெற்றுக்கொண்டதாக குறிப்பு உள்ளது என்றால் 31.03.2011 அன்று ரூ 5 லட்சம் 1ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டது. 20.04.2011 அன்று ரூ7 லட்சம் கொடுக்கப்பட்டது. 03.08.2011 அன்று எந்த பணமும் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை. என் மனைவியிடம் இருந்து நான் 9 லட்சம் வாங்கிவைத்தேன். 12.08.2011 அன்று அந்த 9 லட்சத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன்.

2. அவ்வாறு இருப்பின் பி.சா.ஆ1 ஆவணத்தில் 03.08.2011 தேதியில் குறிப்பிட்ட ரூ 21 லட்சம் தவறு என்றால் ஆமாம் நான் முந்தைய தேதியில் இருந்து பணம் கொடுக்க ஆரம்பித்தேன். பி.சா.ஆ 1 ஆவணத்திற்கு முன்பு எனக்கும் எனது மனைவிக்கும் இடையே கிரையஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் தெரியாது. 19.08.2011 அன்று 1ம் பிரதிவாதிக்கும் என் மனைவிக்கும் இடையே ஒரு கிரையஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. என்பெயரில் பவர் ஏற்படுத்தியபோது பணபரிமாற்றம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரம் ஏற்படுத்திய இரவு சுமார் 10 மணிக்கு 1ம் பிரதிவாதிக்கு ரூ5 லட்சம் கொடுத்தேன். கிரைய ஒப்பந்தம் முன் தொகை ரூ21 லட்சம் அனைத்தும் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

3. 1ம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்து அவரிடம் இருந்து ரசீது எதுவும் பெற்றேனா என்றால் பெற்றேன் என் கைவசம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது வழக்கு என்னவென்றால் 1ம் பிரதிவாதி எனக்கு பவர் கொடுத்து என்மூலம் கிரையஒப்பந்தம் ஏற்படுத்திய பிறகு 1ம் பிரதிவாதி அவரது

மகன்களான வாதிகளுக்கு தவறாக வா.சா.ஆ 2 செட்டில்மென்ட் எழுதிகொடுத்துவிட்டார் என்பது தான் என்றால் சரிதான்.

4. 24.10.2011 அன்று வா.ச.ஆ 3 கிரையஆவணம் மூலம் என்மனைவி ரூ3 லட்சம் பாக்கிதொகை கொடுத்து கிரையம் முடிந்துவிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 கிரையஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பே 19.10.2011 அன்று 1ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு செட்டில்மென்ட் செய்துவிட்டார் என்றால் அப்போது அந்த விவரம் தெரியாது. கிரைய ஒப்பந்தம் மற்றும் வா.சா.ஆ 3 கிரையஆவணத்தில் 1ம் பிரதிவாதி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. கிரையஒப்பந்தம் மற்றும் கிரையஆவணம் பற்றிய விவரம் 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் அனைத்துபணமும் பெற்றுவிட்டார்.

5. நான் வருமானவரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். நான் கொடுத்தாக சொல்லும் 21 லட்சம் வருமானவரியில் காட்டியுள்ளேனா என்றால் தெரியாது. நான் அடமானம் வைத்து தான் கிரையதொகையை பிரதிவாதியிடம் கொடுத்தேன். அதற்கான ரசீதுகள் என்றிடம் உள்ளது. பாக்கி கிரையதொகை ரூ3 லட்சத்தை கிரையம் செய்வதற்கு சுமார் 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பு 1ம் பிரதிவாதியிம் என் மனைவி கொடுத்தார். 24.10.2011 கிரைய ஆவணம் ஏற்படுத்திய தேதியில் நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 3 ஆவணத்தில் ஏற்கனவே பெற்ற ரூ3 லட்சத்தை தான் 24.10.2011 அன்று பெற்றதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான்.

6. என்னை ஏமாற்றி விட்டதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் முதலில் திருமுல்லைவாயில் கமிஸ்னர் ஆபிஸில் புகார் கொடுத்தேன் அதன் பிறகு CM cell ல் புகார் கொடுத்தேன். அதன் ஒப்புதல்

என் கைவசம் உள்ளது. நான் மதுரவாயில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த விசாரணைக்கு 1ம் பிரதிவாதி வரவில்லை. பி.சா.ஆ 3 ஆவணம் 1ம் பிரதிவாதிக்காக நான் பவர் ஆப்அட்டானியாக இருந்து பவித்தாவிற்கு ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். 19.10.2011 அன்று 1ம் பிரதிவாதி என்னை ஏமாற்றி அவரது மகன்களுக்கு செட்டில்மென்ட் செய்துவிட்டதால் 24.10.2011 அன்று 1ம் பிரதிவாதி சார்பில் நான் செய்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.